16.07.2026.

OS. 68/2025

PW 2- ஆறுமுக நயினார் த/பெ. ராமசுப்பு

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.07.2026.

குறுக்கு விசாரணை : (1,2 பிரதிவாதிகள் தரப்பில்)

1. நான் என்ன வழக்கில் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்றால் தங்கசாமி என்பவர் இறந்துவிட்டதால் வாதிகள் தங்கசாமியின் வாரிசுகள் என தாக்கல் செய்த வழக்கில் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன்.

2. தங்கசாமிக்கு வேறு பெயர் உள்ளதா என்றால் சரிதான். தங்கபாண்டி என்ற தங்கசாமி.

3. தங்கப்பாண்டி என்ற தங்கசாமிக்கு மொத்தம் எத்தனை மனைவிகள் என்றால் 2 மனைவிகள்.

4. இரண்டு மனைவிகளையும் எப்போது திருமணம் செய்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

5. இரண்டு மனைவிகளுக்கும் எப்போது குழந்தை பிறந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

6. என்னை சாட்சி சொல்ல யார் அழைத்து வந்தார் என்றால் 2ம் வாதியின் மகள் அழைத்து வந்தார்.

7. எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை

வரவில்லை என்றால் சரிதான்.

8. இறந்துபோன தங்கப்பாண்டி என்ற தங்கசாமி எனக்கு சித்தப்பா உறவுமுறை ஆவார்.

9. முதல் மனைவி உயிருடன் இருக்கும்போதே தங்கப்பாண்டி என்ற தங்கசாமி இரண்டாவது மனைவியை திருமணம் செய்தார் என்றால் சரிதான்.

10. முதல் மனைவி உயிருடன் இருக்கும்போதே 2வது மனைவி திருமணம் செய்ததால் வருவாய்நிலை ஆவணங்களின் படி வாரிசு சான்றிதழ் வழங்க இயலாது என்றால் சரியல்ல.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி